## HFAD என்ன பயன் அளிக்கிறது?

வீட்டில் தீச்சம்பவம் ஏற்பட்டால் அதைப் பற்றி குடியிருப்பவர்களுக்கு முன்னெச்சரிக்கை அளிக்கும். அதன் மூலம் அவர்கள் தீயை அணைப்பதற்கு துரித நடவடிக்கை எடுக்கவோ அல்லது தீ பரவுவதற்கு முன் அந்த இடத்தை விட்டு வெளியேறவோ உதவுகிறது.


## வீடுகளில் HFAD பொருத்துவது கட்டாயமா?

1 ஜூன் 2018 மாதத்திலிருந்து SCDF/BCA/HDB ஆகியவற்றிடம் சமர்ப்பிக்கப்படும் கட்டட வரைபடங்களைக் கொண்ட அனைத்து புதிய வீடுகளுக்கும் மற்றும் தீப்பாதுகாப்பு பணிகள் (தீப்பற்றாத கதவுகள் பொருத்துவது அல்லது திறந்தவெளி மேல் மாடியில் கூரை அமைப்பது போன்றவை) மேற்கொள்ளப்படும் பழைய வீடுகளுக்கும் HFAD கட்டாயம் பொருத்தப்பட வேண்டும்.

புதிய குடியிருப்பு வீடுகளில் HFAD கருவியைப் பொருத்தும் செலவை மேம்பாட்டு நிறுவனங்கள் ஏற்றுக்கொள்ளும். தீப்பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ளப்படும் பழைய வீடுகளில் இந்த செலவை உரிமையாளர்கள் ஏற்க வேண்டும்.

✗ பழைய வீடு

தீப்பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்படாத பழைய வீடுகளில் HFAD கருவியைப் பொருத்த வேண்டியது கட்டாயமில்லை.




✓ புதிய வீடு

HFAD கருவியைப் பொருத்துவது கட்டாயம்



தீப்பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்படாத பழைய வீடுகளில் HFAD கருவியைப் பொருத்த வேண்டியது கட்டாயமில்லை. இருந்தாலும், தீப்பாதுகாப்பை மேம்படுத்த கருவியைப் பொருத்திக்கொள்ள வீட்டு உரிமையாளர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

## கட்டாயமாக பொருத்தப்படும் HFADயின் சிறப்பு அம்சங்கள்




கம்பியில்லா தொழில்நுட்பத்தால் இணைக்கப்படும் HFAD, தகவல்தொடர்பு ஊடக மேம்பாட்டு ஆணையத்தின் (IMDA) குறுகிய தொலைவு கருவிகளுக்கான தொழில்நுட்ப வரையறைகளுக்கு உட்பட வேண்டும்.

## HFAD எச்சரிக்கை ஒலி எழுப்பப்பட்டால் நான் என்ன செய்ய வேண்டும்?

வீட்டிற்குள் தீ அல்லது புகை இருப்பதை உறுதி செய்துக் கொள்ளவும்.

தீயை கண்டறியும்போது, பாதுகாப்பாக இருந்தால் அதை அணைக்கவும்.

தீ பெரிதாக இருந்தால், நீங்களும் மற்ற அனைவரும் பாதுகாப்பாக வெளியேறி, 995 என்ற எண்ணை அழைக்கவும்.

## HFAD கருவி நல்ல பராமரிப்புடன் வேலை செய்கிறது என்பதை நான் எவ்வாறு உறுதி கொள்வது?

HFAD கருவியைப் பராமரிப்பது வீட்டு உரிமையாளர்கள் மற்றும் வீட்டில் வசிப்போரின் பொறுப்பாகும்.

| | |
|---|---|
|  | தயாரிப்பாளர்களின் வழிகாட்டுதலை பின்பற்றுங்கள். |
|  | HFAD கருவி வேலை செய்கிறதா என்பதை சோதிக்க ‘Test’ பொத்தானை அழுத்தவும். சோதனையை மாதம் ஒரு முறையாவது செய்யுங்கள். |
|  | சிங்கப்பூர் குடிமைத் தற்காப்புப் படை, பத்து ஆண்டுகள் வரை நீடிக்கும் உள்ளிணைக்கப்பட்ட மின்கலத்தைப் பயன்படுத்த பரிந்துரைக்கிறது. அதனால், 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை அல்லது மின்கலம் குறைந்த அளவில் இருந்தால் அல்லது ஒலி எழுப்பினால், HFAD கருவியை மாற்றவும். |

## நான் HFAD கருவியை எங்கு வாங்கி, எப்படி பொறுத்துவது?

தீப்பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ளும் விற்பனையாளர்கள்/ வழங்குனர்களை நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.

HFAD கருவியின் விற்பனையாளர்கள், மற்றும் வழங்குனர்களின் பட்டியலை சிங்கப்பூர் குடிமைத் தற்காப்புப் படையின் (SCDF) இணையத்தளத்தில் (www.scdf.gov.sg/HFAD) காணலாம்

**மேல் விவரங்களுக்கு:**




சிங்கப்பூர் குடிமைத் தற்காப்புப் படையின் (SCDF) இணையத்தளத்தைப் பார்க்கலாம்: www.scdf.gov.sg/HFAD



சிங்கப்பூர் குடிமைத் தற்காப்புப் படையை(SCDF) 1800 286 5555 அல்லது 6848 1730 என்ற எண்களில் அழைக்கலாம்.

**இது ஒரு சமூக திட்டம்**

SCDF
The Life Saving Force

**ஆதரவு**

HOUSING & DEVELOPMENT BOARD

People's Association

National Fire And Civil Emergency Preparedness Council
NFEC



# HOME FIRE ALARM DEVICE

# HFAD

## வீடுகளுக்கான தீ எச்சரிக்கை ஒலி எழுப்பும் கருவி (HFAD) என்றால் என்ன?

வீடுகளுக்கான தீ எச்சரிக்கை ஒலி எழுப்பும் கருவி (HFAD) என்பது ஒரு புகை அல்லது வெப்பம் உணர்க்கருவி. வீட்டில் தீச்சம்பவம் ஏற்பட்டால் இந்தக் கருவி ஒலி எழுப்பி முன்னெச்சரிக்கை அளிக்கும்.

தீச்சம்பவம் பற்றி முன்னெச்சரிக்கை அளிப்பதில் வெப்பம் உணர்க்கருவியைவிட புகை உணர்க்கருவி மிக சிறந்தது. எனவே, வீடுகளுக்கான முதன்மை பாதுகாப்புக்கு இது பரிந்துரைக்கப்படுகிறது.

## HFAD கருவியை நான் எங்கு பொருத்த வேண்டும்?

வீட்டின் வெளியேறும் பாதையை ஒட்டிய உட்கூரையில் (எ.கா வரவேற்பறை, உட்புற நடைப்பாதை அல்லது மாடிப்படி நுழைவாயில்கள்) HFAD கருவியைப் பொருத்த வேண்டும். மேம்பட்ட பாதுகாப்புக்கு கூடுதல் HFAD கருவிகளை படுக்கையறை அல்லது மற்ற இடங்களில் பொருத்திக் கொள்ளலாம்.

வீட்டில் ஒன்றுக்கும் மேற்பட்ட HFAD கருவிகள் பொருத்தப்பட்டிருந்தால், அவை ஒன்றோடொன்று (மின் கம்பியுடன் அல்லது மின் கம்பியில்லாமல்) இணைக்கப்பட்டிருக்க வேண்டும். ஒரு HFAD கருவி செயல்பட்டால், இணைக்கப்பட்ட அனைத்து HFAD கருவிகளிலும் எச்சரிக்கை ஒலி எழப்பப்பட வேண்டும்.

## நான் தவறான எச்சரிக்கையை எப்படி தடுப்பது?

HFAD கருவிக்கு அருகில் புகை செல்வதை தடுக்கவும். அது கருவியைச் செயல்பட செய்யும்.

உதாரணத்திற்கு, HFAD கருவிகளைச் சமையலறைகளிலும் குளியலறைகளிலும் பொருத்தக் கூடாது.

தவறான எச்சரிக்கையாகயிருந்தால், கருவியை மீட்டமைக்க Test/Reset பொத்தானை அழுத்தவும். கோளாறு தொடர்ந்தால், HFAD கருவியின் விற்பனையாளரைத் தொடர்பு கொள்ளவும்.

## எத்தனை HFAD கருவிகள் தேவை?

| வீட்டு வகை | உணர்கருவிகளின் எண்ணிக்கை மற்றும் பொருத்தப்படும் இடங்கள்: |
|---|---|
| **ஒரு தளம் கொண்ட வீடுகள்:**<br>வீவக வீடுகள்<br>தனியார் வீடுகள் / கூட்டுரிமை வீடுகள்<br>ஒரு தளம் கொண்ட தரை வீடுகள் | - குறைந்தது 1 புகை உணர்க்கருவி<br>- சுற்றோட்டப் பகுதி* / வெளியேறும் பாதைகளில் பொருத்தப்பட வேண்டும் எ.கா வசிப்பறை, நடைபாதை<br>- விருப்பத்தேர்வு: மேம்பட்ட பாதுகாப்புக்கு கூடுதல் உணர்க்கருவிகளை மற்ற இடங்களில் பொருத்திக் கொள்ளலாம். |
| **அடுக்குமாடி வீடுகள்:**<br>தரை வீடுகள் / அடுக்குமாடி குடியிருப்பு<br>வீவக வீடுகள்<br>தனியார் வீடுகள் / கூட்டுரிமை வீடுகள் | - ஒரு மாடியில் குறைந்தது 1 புகை உணர்க்கருவி<br>- 70m² பரப்பிற்கும் மேற்பட்ட சுற்றோட்டப் பகுதிக் கொண்ட மாடியில், குறைந்தது 2 புகை உணர்க்கருவிகள் பொருத்தப்பட வேண்டும்.<br>- சுற்றோட்டப் பகுதி / வெளியேறும் வழிகளில் பொருத்தப்பட வேண்டும் எ.கா வசிப்பறை, நடைபாதை, மற்றும்/அல்லது படிக்கட்டு தளம்.<br>- விருப்பத்தேர்வு: மேம்பட்ட பாதுகாப்புக்கு கூடுதல் உணர்க்கருவிகளை மற்ற இடங்களில் பொருத்திக் கொள்ளலாம். |

**மேல் விவரங்களுக்கு, சிங்கப்பூர் குடிமைத் தற்காப்புப் படையின்(SCDF) www.scdf.gov.sg/HFAD இணையத்தளத்தைப் பார்க்கலாம்.**

** பொதுவான பகுதிகளான வரவேற்பறை, நடைப்பாதை, உணவருந்தும் அறை அல்லது படிக்கட்டு தளம் போன்றவற்றை சுற்றோட்டப் பகுதி குறிக்கும். இதில் படுக்கையறை, வைப்பறை அல்லது குளியலறைகள் உள்ளடங்காது.*

